FEDERAL COURT OF AUSTRALIA

நேரில் வழக்காடுபவர்களுக்கான நடைமுறைக் குறிப்பு *(GPN-LIP)*

*தயவுசெய்து இந்தப் பயிற்சிக் குறிப்பு முழுவதையும் வாசிக்கவும். வழக்கறிஞர் இல்லாமல் நீங்கள் செயல்படுவதற்கு முன்பு தெரிந்துகொள்ள வேண்டியவற்றை இது உங்களுக்குத் தெரிவிக்கிறது.*

*உங்களுக்கு வாசிப்பது கடினமாக இருந்தாலோ அல்லது உங்களுக்கு ஆங்கில அறிவு போதியளவில் இல்லாமல் இருந்தாலோ தயவுசெய்து உதவி பெறுங்கள்.*

*இந்தப் பயிற்சிக் குறிப்பு பார்ப்பதற்கு நீண்டதாகத் தோன்றினாலும் அது அவ்வளவு நீளமானது அல்ல. இதில் 'இணைப்புகள்' எனப்படும் நான்கு பகுதிகள் உள்ளன:*

- *நாங்கள் சட்டச் சொற்களையோ அல்லது தொழில்நுட்பச் சொற்களையோ பயன்படுத்தினால், இணைப்பு A உங்களுக்கு உதவியாக இருக்கும். அந்தச் சொற்களை இதுபோன்று தடித்த எழுத்துக்களில் அச்சிடுவோம். தடித்த எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ள சொற்களின் விளக்கம் இணைப்பு A-இல் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பொருளைத் தெரிந்துகொள்ள, நீங்கள் இணைப்பு A-க்குச் சென்று, தடித்த எழுத்துக்களில் நீங்கள் வாசித்ததைக் கண்டறிய வேண்டும்.*
- *வழக்குகளை விரைவாகவும் நியாயமாகவும் தீர்ப்பதற்கான நீதிமன்றத்தின் நோக்கத்தைப் பற்றித் தெரிவிக்கும், 1976 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியக் கூட்டாட்சி நீதிமன்றச் சட்டத்தின் (பொதுநலவாயம்) மற்றும் 37N பிரிவுகளின் சுருக்கத்தை இணைப்பு B அளிக்கிறது.*
- *இணைப்பு C -இல் நீதிமன்றத்தின் மற்றைய* ***நடைமுறைக் குறிப்புகளின்*** *பட்டியல் உள்ளது. நீதிமன்றத்தில் பல்வேறு வகையான வழக்குகள் குறித்த* ***நடைமுறைக் குறிப்புகள்*** *உள்ளன.*
- *இணைப்பு D -இல், நீங்கள் பயன்படுத்தக்கூடிய இலவச* ***சட்ட ஆய்வுத் தரவுத்தளங்களின்*** *பட்டியல் உள்ளது.*

*இந்த நடைமுறைக் குறிப்பு முழுவதையும் நீங்கள் படித்துவிட்டீர்கள் என்பதை நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கும் ஒரு படிவத்தில் கையொப்பமிடுமாறு நீதிமன்றம் உங்களைக் கேட்கும். நீதிமன்றத்திலிருந்து ஒருவர் இந்தப் படிவத்தை உங்களுக்கு நேரடியாக வழங்குவார், அல்லது மின்னஞ்சலில் அனுப்புவார், அல்லது நீங்கள் மின்னஞ்சலைப் பயன்படுத்தாத பட்சத்தில் அஞ்சலில் அனுப்பி வைப்பார்.*

# 1. அறிமுகம்

1.1. *இந்த* ***நடைமுறைக் குறிப்பு*** *, ஆஸ்திரேலியாவின் கூட்டாட்சி நீதிமன்றத்தில்* ***நேரில் வழக்காடுபவர்களுக்கானது****.*

1.2. *நீதிமன்றத்தில்உங்களுக்கு ஒரு* ***சட்ட வழக்கு*** *இருந்து, உங்களுக்காக வாதாட ஒரு வழக்கறிஞர் இல்லாத பட்சத்தில், நீங்கள் தாமாகவே நேரில்* ***வழக்காடுபவர்*** *ஆவீர்கள்.*

1.3. **நேரில் தனே வாதாடும் ஒருவர்**, பொறுப்புகளுடன் கூடிய ஒரு பாரதூரமான பணியை மேற்கொள்கிறார்.

1.4. இந்தப் **பயிற்சிக் குறிப்பு** உங்களுக்குப் பின்வருவனவற்றைத் தெரிவிக்கும்:

(அ) நீங்கள் கண்டிப்பாகச் செய்ய வேண்டியசில விடயங்கள் மற்றும் அவற்றைச் செய்யாவிட்டால் என்ன நடக்கும்;

(ஆ) நீங்கள் செய்யக்கூடாதசில விடயங்கள் மற்றும் அவற்றைச் செய்தால் என்ன நடக்கும்;

(இ) நீதிமன்றமும் அங்குப் பணிபுரிகின்றவர்களும்என்ன பணி செய்வார்கள், அவர்களால் என்ன செய்ய இயலாது; மற்றும்

(ஈ) நீதிமன்றத்தில் மக்களின் **பிரதிநிதியாக** வாதாடும்போது வழக்கறிஞர்கள் என்ன செய்வார்கள், என்ன செய்ய மாட்டார்கள்.

1.5. ஒரு வழக்கை நடத்துவது அல்லது அதில் தற்காத்துக்கொள்வது எப்படி என்பது பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பல விடயங்களை இந்தப் பயிற்சிக் குறிப்பு உங்களுக்குத் தெரிவிக்கிறது. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் அது உங்களுக்குத் தெரிவிப்பதில்லை. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய சில விடயங்கள், உங்களிடம் உள்ள வழக்கின் வகையைப் பொறுத்து அமையும். நீங்கள் நீதிமன்றத்தின் மற்றைய **நடைமுறைக் குறிப்புகளைப்** பார்க்க வேண்டியிருக்கலாம். நீங்கள் மற்ற இடங்களில் விதிமுறைகளைத் தேட வேண்டியிருக்கலாம்.

1.6. நீதிமன்றத்தில் அனைத்து வழக்குகளுக்குமான ஒருமைய நடைமுறைக் குறிப்பு (CPN-1) உள்ளது. நீதிமன்றம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள இது உங்களுக்கு உதவும். நீதிமன்றத்தில் பல்வேறு வகையான வழக்குகளுக்கான **நடைமுறைக் குறிப்புகளும்** உள்ளன. உதாரணமாக, குடிவரவு நடைமுறைக் குறிப்பு (MIG-1) என்பது குடிவரவு வழக்குகளுக்கானது. நீதிமன்றத்தின் **நடைமுறைக் குறிப்புகளின்** பட்டியலை இணைப்பு C-இல் காணலாம். நீதிமன்றத்தின் இணையதளத்திலும்**பயிற்சிக்** குறிப்புகளைக் காணலாம்.

1.7. இந்த நீதிமன்றம், ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் 1976 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய கூட்டாட்சி நீதிமன்றச் சட்டம் (பொதுநலவாயம்) எனப்படும் ஒரு சட்டத்தின் கீழ் செயல்படுகிறது (இனிமேல் அதனை "சட்டம்" என்று அழைப்போம்). நீதிமன்றத்தில், அதன் நீதிபதிகளால் உருவாக்கப்பட்ட, கூட்டாட்சி நீதிமன்ற விதிகள் 2011 (பொதுநலவாயம்) எனப்படும் விதிகளும் உள்ளன (இவற்றை நாம் "விதிகள்" என்று அழைப்போம்). மைய நடைமுறைக் குறிப்பானது, பகுதியளவிற்குச் சட்டத்தையும் விதிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1.8. வழக்குகளை விரைவாகவும் நியாயமாகவும் தீர்ப்பதே நீதிமன்றத்தின் நோக்கம். நீங்கள் மேற்கொண்டு செல்வதற்கு முன், சட்டத்தின் 37M மற்றும் 37N பிரிவுகளைப் படிக்க வேண்டும். அந்தப் பிரிவுகளின் சுருக்கத்தை இணைப்பு B-இல் காணலாம். பிரிவு 37M, சச்சரவுகளை விரைவாகவும் நியாயமாகவும் தீர்ப்பதற்கான நீதிமன்றத்தின் இலக்கை எடுத்துரைக்கிறது. பிரிவு 37N-ன்படி, வழக்காடும் அனைவரும் அந்த இலக்கை அடைய உதவ வேண்டும்.

1.9. அனைத்து நீதிமன்றங்களும் செயல்படும் விதத்தில் வேறுபடுகின்றன. நீங்கள் வேறொரு நீதிமன்றத்திலோ அல்லது தீர்ப்பாயத்திலோ ஒரு வழக்கை எதிர்கொண்டிருக்கலாம். இந்த நீதிமன்றம் மற்ற நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்திலிருந்து மாறுபட்டு செயல்படக்கூடும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

## *2. சட்ட உதவி பெறுதல்*

2.1. *நீங்களாகவே ஒரு வழக்கைத் தொடங்க முடிவு செய்வதற்கு முன்போ, அல்லது வழக்கறிஞரின் உதவியின்றி உங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் உங்களைத் தற்காத்துக் கொள்வதற்கு (எதிர்த்து வாதிட) முன்போ, நீங்கள் ஒரு வழக்கறிஞரிடம் கலந்தாலோசிக்க வேண்டும்.*

2.2. *ஒரு வழக்கில் வாதாடித் தோற்பது மிகுந்த செலவை ஏற்படுத்தக்கூடும். தோற்றவர் பொதுவாக வென்றவரின் **செலவுகளைச்** செலுத்த வேண்டும். இந்தச் **செலவுகள்** பல ஆயிரம் டாலர்களாக இருக்கலாம்.*

2.3. *வழக்கறிஞர் இல்லாமல் வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடிவெடுக்கும் முன், உங்கள் வழக்கில் வெற்றி பெற உங்களுக்கு என்ன தேவை என்பதைப் பற்றி நீங்கள் கவனமாகச் சிந்திக்க வேண்டும். உங்கள் வழக்கில் வெற்றி பெற, நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:*

*(அ) நீங்கள் கூறும் விடயங்கள் நீங்கள் கூறுவது போலவே உள்ளன என்பதை நிரூபிக்கும் **சான்றுகளை** நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்;*

*(ஆ) வழக்கிற்குப் பொருந்தும் **சட்டத்தைக்** கண்டறியவேண்டும்; மற்றும்*

*(இ) **சட்டத்தின்படி** நீதிமன்றம் உங்கள் வழியில்தான் வழக்கைத் தீர்ப்பளிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் வாதிடவேண்டும்.*

2.4. *வழக்கறிஞர்கள் வழக்குகளில் வாதாடப் பயிற்சி பெற்றவர்கள். நீதிமன்றத்திற்கு **ஆதாரங்களை** எவ்வாறு கொண்டு வருவது என்று அவர்களுக்குத் தெரியும். ஒரு வழக்கிற்குப் பொருத்தமான **சட்டத்தைக்** கண்டறிய அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு வழக்கை எப்படி வாதிடுவது என்று தெரியும். வழக்கறிஞர்களும் தங்கள் கட்சிக்காரர்களுக்கு ஆலோசனை வழங்கும் போது கவனமாக இருக்க வேண்டும் என்பதை அறிவார்கள்.*

2.5. *உங்களால் ஒரு வழக்கறிஞருக்குப் பணம் செலுத்த முடியாவிட்டால், **சட்ட ஆலோசனையைப்** பெறுவதற்கு சில வழிகள் உள்ளன:*

*(அ) சில வழக்கறிஞர்கள் முதல் அமர்வை இலவசமாக வழங்குவார்கள்;*

*(ஆ) சில வழக்கறிஞர்கள், 'வென்றால் மட்டுமே கட்டணம்' என்ற அடிப்படையில் உங்கள் வழக்கை எடுத்துக்கொள்வார்கள் (நீங்கள் வென்றால் மட்டுமே கட்டணம் அறவிடுவார்கள்); அல்லது*

*(இ) சமூக சட்ட மையங்கள் இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்தற்கோ **சட்ட ஆலோசனைகளை** வழங்கலாம்.*

2.6. *நீதிமன்றத்தின் இணையதளத்தில் , உங்களுக்கு இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ உதவக்கூடியவர்கள் மற்றும் உதவக்கூடிய அமைப்புகளின் பட்டியல் ஒன்றைக் காணலாம். இந்த நபர்களும் அமைப்புகளும் நீதிமன்றத்தின் அங்கங்கள் அன்று.*

2.7. *நீதிமன்றம் ஒரு **தரப்பினரை** சட்ட உதவிக்காகப் பரிந்துரைக்கலாம். விதிகளின் 4.12 ஆம் பிரிவு நீதிமன்றத்திற்கு இந்த அதிகாரத்தை வழங்குகிறது. சட்ட உதவிக்காக நீதிமன்றம் உங்களைப் பரிந்துரைக்க வேண்டிய கட்டாயம் அதற்கு இல்லை. ஒவ்வொரு வழக்கிலும் ஒரு **தரப்பினரை** பரிந்துரை செய்வதா இல்லையா என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும்.*

2.8. *நீங்கள் வழக்கில் வெற்றி பெற முடியுமா என்பது குறித்து சட்ட உதவி பெறுவதற்கு, உருவாக்க செயற்கை நுண்ணறிவு* ***(AI )*** *செயலிகளைப் (Chat GPT, Claude, Microsoft Copilot அல்லது Google Gemini போன்றவை) பயன்படுத்த வேண்டாம். ஒரு வழக்கைத் தொடங்குவதா அல்லது அதில் எதிர்த்து வாதாடுவதா என்பது குறித்த சட்ட உதவிக்கு அந்தச் செயலிகள் நம்பகமானவை அல்ல. அவை வழக்கறிஞர்களைப் போல பயிற்சி பெற்றவை அல்ல. அவை உங்களுக்கு அமெரிக்கச் சட்டத்தின்அடிப்படையிலான பதில்களை அளிக்கக்கூடும். அமெரிக்கச் சட்டம் ஆஸ்திரேலியச் சட்டத்திலிருந்து வேறுபட்டது. செயற்கை நுண்ணறிவு செயலிகள் சட்டக் கேள்விகளுக்குத் தவறான பதில்களை அளிக்கக்கூடும்.*

2.9. *எந்த விதமான சட்ட உதவிக்கும்* ***சமூக ஊடகங்களையோ*** *அல்லது* ***போலிச் சட்ட*** *வலைத்தலங்களையோ பயன்படுத்தாதீர்கள். நீங்கள் சட்டச் சிக்கல்களில் இருந்து தப்பிக்கலாம் அல்லது வழக்கில் வெற்றி பெறலாம் என்று அந்த இணையதளங்கள் கூறக்கூடும். அவர்கள் சட்ட உதவி வழங்குவது போல் தோன்றலாம், ஆனால் உண்மையில் அவர்கள் அவ்வாறு செய்வதில்லை. அவர்கள் அளிக்கும் பல பொய்யான பதில்கள் உண்மையான* ***சட்டத்தை****அடிப்படையாகக் கொண்டவை அல்ல என்பதால், நீதிமன்றம் அவற்றை ஏற்றுக்கொள்ளாது. உண்மையான* ***சட்டத்தை*** *அடிப்படையாகக் கொண்டிராத சட்ட வாதங்களை நீங்கள் நீதிமன்றத்தில் முன்வைத்தால், நீங்கள் கடுமையான சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும்.*

2.10. *நீங்கள் உண்மையான* ***சட்டம்*** *மற்றும்* ***ஆதாரங்களின்****அடிப்படையில் ஒரு வழக்கைத் தொடங்கினாலோ, எதிர்த்து வாதிட்டாலோ, உங்கள் வழக்கை நீதிமன்றத்திற்கு விளக்குவதற்கு நீங்கள்* ***செயற்கை நுண்ணறிவு செயலிகளைப்*** *பயன்படுத்தலாம். உங்கள் வழக்கை விளக்குவதற்கு நீங்கள்* ***செயற்கை நுண்ணறிவு செயலிகளைப்*** *பயன்படுத்தினால், நீதிமன்றம் அதைப் பற்றிக் கேட்கும்போது நீங்கள் அவ்வாறு செய்ததை நீதிமன்றத்திடம் தெரிவிக்க வேண்டியிருக்கும். செயற்கை நுண்ணறிவு செயலிகளில் நீங்கள் பெறும் அனைத்தையும் சரிபார்க்க வேண்டும். அனைத்துத் தகவல்களும் சரியானவை மற்றும் முழுமையானவை என்பதை நீங்கள் சரிபார்க்க வேண்டும்.* ***சட்டம்*** *சரியானது என்பதையும் நீங்கள் சரிபார்க்க வேண்டும். ஒரு வழக்கறிஞரிடம் கேட்பதே பொதுவாகச் சரிபார்ப்பதற்கான சிறந்த வழியாகும். உங்களால் ஒரு வழக்கறிஞரின் உதவியைப் பெற முடியாவிட்டால்,* ***சட்டத்தைச்*** *சரிபார்க்க* ***சட்ட ஆய்வுத் தரவுத்தளத்தைப்*** *பயன்படுத்தலாம். இணைப்பு D-இல் இலவச* ***சட்ட ஆய்வுத் தரவுத்தளங்களின்*** *பட்டியல் ஒன்றைக் காணலாம். உண்மைகள் அல்லது* ***சட்டம்*** *குறித்து நீதிமன்றத்திற்குப் பொய்யான தகவல்களை நீங்கள் அளித்தால் நீங்கள் கடுமையான சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடலாம். .*

2.11. *உங்கள் வழக்கில்* ***செயற்கை நுண்ணறிவு செயலிகளைக்*** *கொண்டு நீங்கள் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்பது குறித்து நீதிமன்றம் விரைவில் கூடுதல் தகவல்களை வெளியிடும்.*

## *3.* பிற உதவிகளைப் பெறுதல்

3.1. *உங்களுக்கு நல்ல ஆங்கிலப் புலமை இல்லாமல் இருப்பின், அதனால் உங்களுக்கு* ***மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர்*** *தேவைப்பட்டால், அதை முடிந்தவரை விரைவில் நீங்கள் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் பேசும் மொழி என்னவென்பதை நீதிமன்றத்திற்குக் கண்டிப்பாகத் தெரிவிக்கவும்.*

3.2. *நீங்கள் ஒரு* ***மொழிபெயர்த்துரைப்பாளர்*** *மூலம்* ***பதிவகத்துடன்*** *பேச வேண்டியிருந்தால், தொலைபேசி* ***மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை*** *அணுக 131 450 என்ற எண்ணைஅழைக்க வேண்டும் .*

3.3. *உங்களால் பணம் கொடுத்து* ***மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை*** *அமர்த்திக்கொள்ள முடிந்தால், நீங்களே* ***ஒருவரைத்*** *தேடிக் கொள்ள வேண்டும். [www.naati.com.au](http://www.naati.com.au) என்ற அதன் இணையவழிப் பெயர்ப் பட்டியலில்*

**மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரைக்** கண்டறிய NAATI உங்களுக்கு உதவும் அல்லது நீங்கள் 1300 557 470 என்ற எண்ணில் NAATI-ஐத் தொலைபேசி ஊடாக அழைக்கலாம்.

3.4. உங்களுக்கு **மொழிபெயர்த்துரைப்பாளர்** ஒருவர் தேவைப்பட்டால் நீதிமன்றம் உதவும், ஆனால் அதற்காக நீங்கள் பணம் செலுத்த முடியாது. நீதிமன்றத்தில் உங்கள் முதல் **விசாரணைக்குக்** குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பாவது நீங்கள் **பதிவகத்துடன்** தொடர்பு கொள்ள வேண்டும். நீங்கள் பேசும் மொழி என்னவென்பதை நீதிமன்றத்திற்குக்கண்டிப்பாகத் தெரிவிக்கவும்.

3.5. **மொழிபெயர்த்துரைப்பாளர்கள்** வழக்கறிஞர்கள் அல்லர். அவர்களால் உங்களுக்கு **சட்ட ஆலோசனை** வழங்க முடியாது.

3.6. நீதிமன்றத்திடம், மொழிபெயர்த்துரைப்பாளர்களுடன் பணியாற்றுவதற்கான **நடைமுறைக் குறிப்பு** (GPN-INTERP) என்றழைக்கப்படும் ஒரு நடைமுறைக் குறிப்பு உள்ளது. **மொழிபெயர்த்துரைப்பாளர்கள்** பற்றிய கூடுதல் தகவல்களை நீதிமன்றத்தின் இணையதளத்தில்காணலாம்.

3.7. சில நீதிமன்றக் கட்டிடங்களில், சட்ட ஆய்வு செய்வதற்கோ, **ஆவணங்களை ஆயத்தம் செய்வதற்கோ**நீங்கள் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய இலவச கணினி மற்றும் அச்சு சேவைகள் உள்ளன. ஒரு நூலகத்தையோ அ **சட்ட ஆய்வுத் தரவுத்தளத்தையோ** கூட உங்களால் பயன்படுத்த இயலுமாகலாம். உங்கள் பகுதியில் உள்ள இந்தச் சேவைகள் குறித்து **பதிவகத்தில்** நீங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

3.8. ஏதேனும் காரணத்தை முன்னிட்டு நீதிமன்றத்தை அணுகுவதில் அல்லது நீதிமன்றத்தில் உங்கள் வழக்கு குறித்துப் பேசுவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் , உங்கள் முதல் நீதிமன்ற **விசாரணைக்குக்** குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பே நீதிமன்றப் **பதிவகத்**துடன்தொடர்பு கொள்ளவும். நீதிமன்றம் உங்களுக்கு உதவ முயற்சிக்கும். **நியாயமான சரிப்படுத்தல்கள்** செய்யப்படும், ஆனால் நீதிமன்ற வழக்கின் தன்மை காரணமாக செய்யக்கூடியவற்றிற்கு வரம்புகள் உள்ளன. இந்த செயல்முறை அனைத்து தரப்பினருக்கும் நியாயமானதாக இருப்பதை நீதிமன்றம் உறுதி செய்தாக வேண்டும், மேலும் வழக்கு நடத்தப்படும் விதத்தில் மாற்றங்கள் செய்ய முடியுமா என்பதைத் தீர்மானிக்கும்போது அனைத்துத் தரப்பினருக்குமான செலவுகளையும் கருத்தில் கொண்டாக வேண்டும். நீதிமன்றத்திற்கு வர சிரமப்படும் அனைவருக்கும் அதனால் உதவ முடியாது. நீதிமன்றம் உங்களுக்கு உதவ முடியுமா என்பது, உங்களுக்கு ஏன் அது கடினமாக இருக்கிறது என்பதைப் பொறுத்தது.

3.9. ஏதேனும் காரணத்திற்காக நீதிமன்ற **விசாரணையை ஒத்திவைக்க** வேண்டியிருந்தால், நீங்கள் கூடிய விரைவில் நீதிமன்றப் பதிவகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். **ஒத்திவைப்புக்கு** உங்களிடம் தகுந்த காரணம் இருக்க வேண்டும். உங்களுக்கு ஏன் **ஒத்திவைப்பு** ஒன்று தேவைப்படுகிறது என்பது குறித்து நீதிமன்றத்தில் **சான்றுகளை** வழங்குமாறு நீங்கள் கேட்கப்படலாம். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நீதிமன்றப் **பதிவகத்தில்** சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

# 4. நீங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தால் **நீங்கள் அவசியம்** என்ன செய்தாகவேண்டும்

4.1. நீங்கள் தான் வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு வருபவர் (அதாவது, நீங்கள் **விண்ணப்பதாரர், -வாதி** அல்லது **மேல்முறையீட்டாளர்** என்று அழைக்கப்பட்டால்) என்றால், இந்தப் பிரிவில் உள்ள அனைத்தையும் நீங்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டும்.

4.2. உண்மைகள் மற்றும் **சட்டத்தின்**அடிப்படையில் உங்களால் நிரூபிக்க முடிந்தால்

மட்டுமே நீங்கள் ஒரு **கோரிக்கையை** அல்லது **மேல்முறையீட்டை** மேற்கொள்ள வேண்டும். உங்கள் கோரிக்கையின் உண்மைகளை நிரூபிக்க உங்களிடம் **ஆதாரங்களும்** , உங்கள் **மேல்முறையீட்**டிற்கு ஆதாரமாக உள்ள **சட்டமும்** இருக்க **வேண்டும்.** உண்மைகள் மற்றும் **சட்டத்தின் ஆதாரம்**இல்லாமல் நீங்கள் ஒரு **கோரிக்கையையோ** அல்லது **மேல்முறையீட்டையோ** மேற்கொண்டால், உங்கள் வழக்கு மேற்கொண்டு தொடர அனுமதிக்கப்படாது.

4.3. சட்டரீதியான சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு மட்டுமே நீங்கள் நீதிமன்றத்தைப் பயன்படுத்த வேண்டும். ஒருவரைப் பழிவாங்குவதற்கோ அல்லது ஒருவருக்கு நீங்கள் செலுத்த வேண்டிய கடனிலிருந்து தப்பிப்பதற்கோ நீதிமன்றம் சரியான இடம் அல்ல. நீதிமன்றத்தில் அளிக்கப்படும் **சான்றுகளின்** அடிப்படையில் மட்டுமே நீதிமன்றம் சட்ட முடிவுகளை எடுக்க முடியும். முறையான **கோரிக்கை** அல்லது **மேல்முறையீடு** இல்லாமல் நீதிமன்றத்திற்கு வருவது , நீதிமன்ற செயல்முறையைத் தவறாகப் பயன்படுத்துவதாகும்.

4.4. உங்கள் **கோரிக்கையை** அல்லது **மேல்முறையீட்டை** நீதிமன்றத்தில் விளக்க உங்களால் இயலுமாக இருக்க வேண்டும். உங்களால் தெளிவாக விளக்க முடிய வேண்டும் என்பது கட்டாயம். நீங்கள் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லக்கூடாது.

4.5. நீதிமன்றம் என்ன **உத்தரவுகளைப்** பிறப்பிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ , அதை நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். நீதிமன்றம் பிறப்பிக்கக்கூடிய **உத்தரவுகளை** மட்டுமே நீங்கள் அதனிடம் கோர முடியும்.

4.6. சச்சரவை முடிவுக்குக் கொண்டுவர உதவும் உண்மைகளையும் **சட்டத்தையும்** மட்டுமே நீங்கள் உள்ளடக்க வேண்டும். சர்ச்சையுடன் தொடர்பில்லாத விடயங்களைஉள்ளடக்காதீர்கள். தேவைக்கதிகமான தகவல்கள் உங்கள் வழக்கிற்கு உதவாது.

4.7. கீழ் வருவனவற்றில், நீதிபதிகள், **பதிவாளர்கள்**, நீதிமன்றப் பணியாளர்கள் மற்றும் **பிற தரப்பு** வழக்கறிஞர்களுடன் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது நீங்கள் மரியாதையுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டிதெள அவசியம்: .

(a) உங்கள் அனைத்து எழுத்துப்பூர்வ ஆவணங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளில்; மற்றும்

(b) நீங்கள் நீதிமன்றத்திலோ அல்லது வேறு இடங்களிலோ ஆட்களைச் சந்திக்கும்போது.

4.8. நீங்கள் கத்தவோ, திட்டவோ, மிரட்டவோ அல்லது முரட்டுத்தனமாக நடந்துகொள்ளவோ கூடாது.

4.9. உங்களுக்குத் தேவைப்படும்போது அல்லது உங்கள் தொடர்பு உங்கள் வழக்கோடு நேரடியாகத் தொடர்புடையதாக இருக்கும்போது மட்டுமே நீங்கள் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

4.10. உங்கள் வழக்கைத் தொடங்கிய பிறகு, நீதிமன்றத்திற்கு நீங்கள் அனுப்பும் அனைத்து மின்னஞ்சல்கள் அல்லது கடிதங்களின் நகல்கள் மற்ற **தரப்பு** வழக்கறிஞர்களுக்கு அனுப்பப்பட்டாக வேண்டும். நீங்கள் நீதிமன்றத்திற்கு பல ஒரே மாதிரியான மின்னஞ்சல்களை அனுப்பவோ, மின்னஞ்சல்கள் மூலம் உங்கள் வழக்கை வாதிட முயற்சிக்கவோ கூடாது. உங்கள் தரப்பு வாதங்களை முன்வைப்பதற்கான நேரமும் இடமும், நீதிமன்ற **விசாரணைகளின்போதோ** அல்லது நீதிமன்றத்தால் உங்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்ட **ஆவணங்களிலோ** ஆகும்.

4.11. நீதிமன்றம் நீங்கள் என்ன செய்யவேண்டும் என **உத்தரவிடுகிறதோ** அதை நீங்கள் செய்தாக வேண்டும். நீதிமன்றம் தனது **உத்தரவுகளில்** ஒரு **ஆவணத்தைத் தாக்கல்**

செய்ய நிர்ணயித்துள்ள நேரத்திற்குள் நீங்கள் அந்த **ஆவணத்தைத் தாக்கல்** செய்தாக வேண்டும். நீங்கள் நீதிமன்றத்தின் **உத்தரவுகளுக்குக்** கீழ்ப்படியாவிட்டால், உங்கள் வழக்கைத் தொடர நீதிமன்றம் உங்களை அனுமதிக்காமல் போகலாம்.

4.12. நீங்கள் அனைத்து நீதிமன்ற **விசாரணைகளுக்கும்** சரியான இடத்தில் சரியான நேரத்தில் வருகைதர வேண்டும். இந்த விடயங்களை நீங்கள் தெரிந்துகொள்வதை உறுதி செய்வது உங்கள் பொறுப்பாகும். சரியான இடத்திலும் நேரத்திலும் நீங்கள் **விசாரணைக்கு** வருகை தரவில்லை என்றால், உங்கள் வழக்கை மேற்கொண்டு நடத்த உங்களுக்கு அனுமதி மறுக்கப்படலாம்.

4.13. சச்சரவை முடிவுக்குக் கொண்டுவர நீங்கள் மற்ற **தரப்பினருடன்** இணைந்து செயல்பட வேண்டும். உங்களுக்கு மற்ற **தரப்பினரைப்** பிடிக்காமலும், அவர்களை நீங்கள் நம்பாமலும் இருக்கலாம். அப்போதும் நீங்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க உங்களால் முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும். மற்ற **தரப்பினருடன்** உடன்படுவதன் மூலம் உங்களால் சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்ற நிலையில், உங்கள் **வழக்கைத்** தொடர்வதில் உள்ள அபாயங்களைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்.

4.14. கட்டணம் செலுத்துவதிலிருந்து உங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டாலன்றி, நீங்கள் நீதிமன்றக் கட்டணங்களைச் செலுத்தியாக வேண்டும். நீதிமன்றத்தில் ஆவணங்களைத் **தாக்கல்**செய்வதற்கும் **இறுதி விசாரணைகளுக்கும்** கட்டணங்கள் உண்டு. நீதிமன்றக் கட்டணங்கள் குறித்த கூடுதல் தகவல்களை நீதிமன்றத்தின் இணையதளத்தில்காணலாம்.

# 5. கோரல் அல்லது மேல்முறையீட்டை நீங்கள் எதிர்கொண்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்

5.1. உங்களுக்கு எதிராக வேறொருவர் தொடுத்த **வழக்கிற்கு** நீங்கள் தற்காத்துக் கொள்ளும் பட்சத்தில் (அதாவது, நீங்கள் **பதிலளிப்பவர் அல்லது எதிர்வாதி** என்று அழைக்கப்படும் பட்சத்தில்), இந்தப் பிரிவில் உள்ள அனைத்தையும் நீங்கள் கட்டாயம் செய்தாகவேண்டும்.

5.2. உண்மைகளையும் **சட்டத்தையும்** கொண்டு உங்கள் **வாதத்திற்**கான ஆதாரங்களை உங்களால் அளிக்க முடிந்தால் மட்டுமே, நீங்கள் அந்தக் **கோரிக்கையை** எதிர்த்துப் போராட வேண்டும். மற்ற **தரப்பினரிடம்** அவர்களுடைய **கோரிக்கைக்கு ஆதாரம்** இல்லாவிட்டாலோ அல்லது அவர்களின் **ஆதாரம்** பலவீனமாக இருந்தாலோ, அவர்கள் தங்கள் வழக்கை நிரூபிக்காததால் வழக்கில் அவர்கள் தோற்க வேண்டும் என்று உங்களால் வாதிட முடியும்.

5.3. மற்ற **தரப்பினர்** கூறுவதிலிருந்து உண்மைகள் வேறுபட்டவை என்று நீங்கள் வாதிட விரும்பினால், அதற்கு ஆதாரமாக அமையும் **சான்றுகள்** உங்களிடம் அவசியம் இருந்தாகவேண்டும். எதிர் தரப்பினர் தங்களது கோரிக்கை அல்லது **மேல்முறையீட்டில்** தோற்க வேண்டும் என்று **சட்டம்** கூறுகிறது என்பதை உங்களால் நிரூபிக்க முடிய வேண்டும்.

5.4. **உங்களுடைய எதிர்-வாதத்தை** நீதிமன்றத்தில் விளக்க உங்களால் அவசியம் இயலுமாக இருக்கவேண்டும். . நீங்கள் தெளிவாக விளக்க வேண்டும். நீங்கள் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லக்கூடாது.

5.5. சச்சரவைமுடிவுக்குக் கொண்டுவர உதவும் உண்மைகளையும் **சட்டத்தையும்** மட்டுமே நீங்கள் உள்ளடக்க வேண்டும். சர்ச்சையுடன் தொடர்பில்லாத விடயங்களைச் உள்ளடக்காதீர்கள். தேவைக்கதிகமான தகவல்கள் உங்கள் வழக்கிற்கு உதவாது.

5.6. *கீழ் வருவனவற்றில், நீதிபதிகள், **பதிவாளர்கள்**, நீதிமன்றப் பணியாளர்கள் மற்றும் **பிற தரப்பு** வழக்கறிஞர்களுடன் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது செ நீங்கள் மரியாதையுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.*

*(a) உங்கள் அனைத்து எழுத்துப்பூர்வ **ஆவணங்கள்**, மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளில்; மற்றும்*

*(b) நீங்கள் நீதிமன்றத்திலோ அல்லது வேறு இடங்களிலோ ஆட்களைச் சந்திக்கும்போது.*

5.7. *நீங்கள் கத்தவோ, திட்டவோ, மிரட்டவோ அல்லது முரட்டுத்தனமாக நடந்துகொள்ளவோ கூடாது.*

5.8. *உங்களுக்குத் தேவைப்படும்போதும், உங்கள் தொடர்பு உங்கள் வழக்குடன் நேரடியாகத் தொடர்புடையதாக இருக்கும்போதும் மட்டுமே நீங்கள் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.*

5.9. *நீதிமன்றத்திற்கு நீங்கள் அனுப்பும் அனைத்து மின்னஞ்சல்கள் அல்லது கடிதங்களின் நகல்கள் **மற்ற தரப்பினரின்** வழக்கறிஞர்களுக்கு அனுப்பப்பட்டாக வேண்டும். நீங்கள் நீதிமன்றத்திற்கு பல ஒரே மாதிரியான மின்னஞ்சல்களை அனுப்பவோ அல்லது மின்னஞ்சல்களில் **உங்கள் தரப்பு வாதத்தை** முன்வைக்கவோ கூடாது. **உங்கள் தரப்பு வாதத்தை** முன்வைப்பதற்கான நேரமும் இடமும் , **நீதிமன்ற விசாரணைகளின்போதோ** அல்லது நீதிமன்றத்தால் உங்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்ட **ஆவணங்களிலோ** ஆகும்.*

5.10. *நீதிமன்றம் நீங்கள் என்ன செய்யவேண்டும் என **உத்தரவிடுகிறதோ** அதை நீங்கள் செய்தாக வேண்டும். நீதிமன்றம் தனது உத்தரவுகளில் ஒரு **ஆவணத்தைத் தாக்கல்** செய்ய நிர்ணயித்துள்ள நேரத்திற்குள் நீங்கள் அந்த **ஆவணத்தைத்** தாக்கல்செய்தாக வேண்டும். நீங்கள் நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்குக்கீழ்ப்படியாவிட்டால், உங்கள் தரப்பு வாதத்தைத் தொடர நீதிமன்றம் உங்களை அனுமதிக்காமல் போகலாம்.*

5.11. *நீங்கள் அனைத்து நீதிமன்ற **விசாரணைகளுக்கும்** சரியான இடத்தில் சரியான நேரத்தில் வருகைதந்தாக வேண்டும். இந்த விடயங்களை நீங்கள் தெரிந்துகொள்வதை உறுதி செய்வது உங்கள் பொறுப்பாகும். நீங்கள் சரியான இடத்திலும் நேரத்திலும் **விசாரணைக்கு** வருகைதரத் தவறினால், நீதிமன்றம் உங்களுக்கு எதிராக **உத்தரவுகளைப்** பிறப்பிக்கக்கூடும்.*

5.12. *சச்சரவை முடிவுக்குக் கொண்டுவர நீங்கள் மற்ற **தரப்பினருடன்** இணைந்து செயல்பட வேண்டும். உங்களுக்கு மற்ற **தரப்பினரைப்** பிடிக்காமலும், அவர்களை நீங்கள் நம்பாமலும் இருக்கலாம். அப்போதும் நீங்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க உங்களால் முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும். மற்ற **தரப்பினருடன்** உடன்படுவதன் மூலம் சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்ற நிலையில், அந்த **வழக்கைத்** தொடர்ந்து தற்காத்துக்கொள்வதில் உங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களைப் பற்றிச் சிந்தியுங்கள்.*

5.13. *கட்டணம் செலுத்துவதிலிருந்து உங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டாலன்றி, நீங்கள் நீதிமன்றக் கட்டணங்களைச் செலுத்தியாக வேண்டும். **வழக்கு** அல்லது **மேல்முறையீட்டை** நீதிமன்றத்துக்குக் கொண்டு வருபவரே நீதிமன்றக் கட்டணங்களில் பெரும்பகுதியைச் செலுத்துவார். அப்போதும் நீங்கள் செலுத்த வேண்டிய சில கட்டணங்கள் இருக்கலாம். **இறுதி விசாரணைக்கு** ஒருவரை சாட்சியாக அழைத்து வரவோ, அல்லது நீதிமன்றத்திற்கு **ஆவணங்களைக்** கொண்டு வரச் செய்யவோ நீங்கள் **அழைப்பாணை** ஒன்றைக்கோர விரும்பலாம். நீங்கள் மற்ற தரப்புக்கு எதிராக ஒரு **இடை விசாரணை** விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய விரும்பலாம். அதுபோன்ற விடயங்களுக்கு, நீங்கள் பொதுவாகக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். நீதிமன்றக் கட்டணங்கள் குறித்த கூடுதல் தகவல்களை நீதிமன்ற*

இணையதளத்தில்காணலாம்.

# 6. நீதிமன்றம் என்ன செய்யும்

## A. நீதிமன்றம்

6.1. வழக்குகளுக்குத் தீர்ப்பளிப்பதே நீதிமன்றத்தின் முக்கியப் பணியாகும். ஒவ்வொரு வழக்கிலும் மூன்று முக்கியமான விடயங்களை அது தீர்மானிக்க வேண்டும்:

(அ) உண்மைகள் என்ன (அதாவது, என்ன நடந்தது)?

(ஆ) **சட்டம்** என்ன (அதாவது, இவ்வகையான வழக்கிற்கு என்ன விதி அல்லது விதிகள் பொருந்தும்)?

(இ) நீதிமன்றம் இந்த வழக்கை எவ்வாறு தீர்மானிக்க வேண்டும் என்று **சட்டம்** கூறுகிறது?

6.2. உங்களுக்கு உள்ள அனைத்து **சட்டப் பிரச்சினைகளையும்** நீதிமன்றத்தால் தீர்க்க முடியாமல் போகலாம். அதனால் குறிப்பிட்ட சில **சட்டப் பிரச்சினைகள்** குறித்து மட்டுமே முடிவெடுக்க முடியும். அவை நீதிமன்றத்தின் **அதிகார வரம்பிற்குள்** வருபவையாக இருக்கும். . நீதிமன்றத்தின் **அதிகார வரம்பு** குறித்த தகவல்களை நீதிமன்றத்தின் இணையதளத்தில் காணலாம்.

6.3. நீதிமன்றம் நீதிபதிகள், **பதிவாளர்கள்** மற்றும் நீதிமன்ற ஊழியர்களைக் கொண்டது. நீதிபதிகளும் **பதிவாளர்களும்** சுதந்திரமானவர்கள் மற்றும் நடுநிலையானவர்கள். இதன் பொருள், அவர்கள் உண்மைகள் மற்றும் **சட்டத்தின்** அடிப்படையில் மட்டுமே முடிவெடுப்பார்கள் என்பதாகும். அவர்கள் அரசாங்கத்திடமிருந்தோ அல்லது மற்றவர்களிடமிருந்தோ எந்தவிதமான அழுத்தத்திற்கோ அல்லது செல்வாக்கிற்கோ ஆட்படமாட்டர். .

6.4. நீதிமன்ற ஊழியர்களும் சுதந்திரமானவர்களாகவும் பாரபட்சமற்றவர்களாகவும் இருபவர்கள். . அவர்கள் நீதிமன்றத்தைப் பயன்படுத்துபவர்களுடன் தொடர்பில் இருப்பர் மற்றும் , அவர்களுக்குத் தகவல்களை அளிப்பர்.

6.5. வழக்குகளைத் தீர்ப்பதற்கு நீண்ட காலம் ஆகலாம். தாமதங்கள் பெரும்பாலும் நீதிபதிகள், **பதிவாளர்கள்** மற்றும் நீதிமன்ற ஊழியர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை.

## B. நீதிபதி

6.6. உண்மைகளையும் **சட்டத்தையும்** கருத்தில் கொண்டு உங்கள் வழக்கில் தீர்ப்பளிப்பதே நீதிபதியின் முக்கியப் பணியாகும்.

6.7. நீதிபதி, வழக்கமாக **வழக்கு மேலாண்மை விசாரணைகளை** நடத்துவதன் மூலம், உங்கள் வழக்கிற்கான தயார்ப்படுத்துகை விதத்தையும் கட்டுப்படுத்துவார். உங்கள் வழக்கில் அனைத்துத் **தரப்பினரும்** எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, அந்த **விசாரணைகளின்** போது நீதிபதி **உத்தரவுகளைப்** பிறப்பிப்பார். அந்த **உத்தரவுகளில்**, நீதிமன்றத்தில் ஆவணங்களைத் **தாக்கல்** செய்வதற்கான காலக்கெடுவும் அடங்கும்.

6.8. நீதிமன்றம், வழக்கு விவரப் பட்டியல் முறை என நாம் அழைக்கும் ஒரு முறையின் மூலம் வழக்குகளை நிர்வகிக்கிறது. ஒவ்வொரு வழக்கும், **இறுதி விசாரணை** வரை நிர்வகிக்கப்படுவதற்காக ஒரு நீதிபதிக்கு ஒதுக்கப்படுகிறது. உங்கள் வழக்கை நிர்வகிக்கும் அல்லது அதில் தீர்ப்பளிக்கும் நீதிபதியை உங்களால் தேர்ந்தெடுக்க முடியாது. வழக்குப்பதிவு முறை மற்றும் வழக்குகள் ஒதுக்கப்படும் விதம் குறித்த

*தகவல்களை [மைய நடைமுறைக் குறிப்பில்] நீங்கள் காணலாம்.*

6.9. ***பாரபட்சத்தின்*** *காரணமாக உங்கள் வழக்கை விசாரிக்க முடியாது என ஒரு நீதிபதி முடிவுசெய்யலாம். இது அரிதாக நடக்குமொன்று. உங்கள் வழக்கில் உள்ள* ***தரப்பினரில்*** *ஒருவருடனோ அல்லது சாட்சிகளில் ஒருவருடனோ அவர்களுக்கு நெருங்கிய உறவு இருப்பதாக நீதிபதி கண்டறிந்தால், அவ்வாறு நடக்கலாம்.*

6.10. *ஒரு* ***தரப்பினர்*** *முன்வைக்கும் வாதத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறுவதால் மட்டுமே ஒரு நீதிபதி பாரபட்சமானவர் ஆகிவிட மாட்டார். உங்கள் வழக்கை விசாரிக்க முடியாது என நீதிபதி முடிவு செய்தால், அந்த வழக்கை விசாரிக்க மற்றொரு நீதிபதியை நீதிமன்றம் ஏற்பாடு செய்யும்.*

6.11. *ஒரு நீதிபதி* ***சட்டச் சிக்கல்களை*** *எழுப்பி, அவை குறித்து சம்பந்தப்பட்ட* ***தரப்பினர்*** *என்ன கூறுகிறார்கள் என்று கேட்கலாம். ஒரு நீதிபதி சில* ***பிரச்சினைகள்*** *குறித்தோ, அல்லது ஒரு* ***தரப்பினரின் சான்றுகள்*** *அல்லது வாதங்களில் உள்ள சிக்கல்கள் குறித்தோ தனது ஆரம்பக் கட்டக் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடும். இதன் பொருள் நீதிபதி வழக்கில் தீர்ப்பளித்துவிட்டார் என்பதல்ல. மேலும், நீதிபதி* ***பாரபட்சமானவர்*** *என்றும் அர்த்தமல்ல. வழக்கு எதைப் பற்றியது என்பதைக் கண்டறிவதும், பொருந்தக்கூடிய* ***சட்டத்தைத்*** *தெளிவுபடுத்துவதற்காகக் கேள்விகள் கேட்பதும் நீதிபதியின் பணிகளில் ஒன்றாகும். வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய* ***சட்டச் சிக்கல்களைப்*** *புரிந்துகொள்வதற்காக நீதிபதி இவ்வாறு செய்வார். .*

*C. பதிவாளர்*

6.12. ***சட்டமும் விதிகளும்*** *வழக்குகளை நிர்வகிக்க உதவும் வகையில்* ***பதிவாளர்களுக்கு*** *சில அதிகாரங்களை வழங்குகின்றன.* ***பதிவாளர்கள்*** *சில வகையான வழக்குகளை அல்லது வழக்குகளின் சில பகுதிகளைக் கவனித்துக்கொள்வதன் மூலம் நீதிபதிகளுக்கு உதவுபவர்கள்.* ***பதிவாளர்கள் விசாரணைகள்*** *அல்லது* ***கலந்தாய்வுகளை*** *நடத்தலாம். அவர்கள்* ***உத்தரவுகளை*** *இடலாம். அவர்களால் ஒரு வழக்கின் சில பகுதிகளைத் தீர்மானிக்க முடியும். அவர்களுடைய பணி, ஒரு நீதிபதியின் பணியை விடக் குறைவானது.*

6.13. *ஒரு* ***பதிவாளரால்*** *,* ***விசாரணை*** *அல்லது* ***கலந்தாய்வின்*** *போது, நீதிமன்றம் எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்த பொதுவான தகவல்களை உங்களுக்கு வழங்க முடியும்.*

***D. நீதிமன்ற ஊழியர்கள்***

6.14. *நீதிமன்ற ஊழியர்கள் மூன்று வகைப்படுவார்கள்:*

*(அ) நீதிபதிகளுக்கு உதவும்* ***சட்ட-அறை*** *ஊழியர்கள்;*

*(ஆ) பதிவாளர்களுக்கு உதவும்* ***பதிவாளர்*** *ஆதரவுதவி ஊழியர்கள்; மற்றும்*

*(இ)* ***பதிவகத்தின்*** *பணிகளுக்கு உதவும் பதிவக ஊழியர்கள்.*

6.15. ***சட்ட-அறை*** *ஊழியர்கள் கூட்டாளிகள் அல்லது செயலாக்க உதவியாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள்,* ***'சேம்பர்ஸ்'*** *என்று அழைக்கப்படும் நீதிபதிகளின் அலுவலகங்களில் தங்கள் நீதிபதிகளுக்கு உதவுபவர்கள். அவர்கள்* ***விசாரணைகளை*** *ஏற்பாடு செய்து அவற்றில் கலந்துகொள்வர். . உங்கள் வழக்கில் அவர்களது நீதிபதி பிறப்பித்த உத்தரவுகளின் நகல் ஒன்றை அவர்களால் வழங்க முடியும்.*

6.16. ***விசாரணைகளுக்கான*** *ஏற்பாடுகள் குறித்தும், நீதிமன்றத்தில்* ***தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள்*** *குறித்தும்* ***சட்ட-அறை*** *ஊழியர்களால் தகவல் அளிக்க இயலும். .*

6.17. *பதிவாளர் உதவிப் பணியாளர்கள் **பதிவாளர்களுக்கு** உதவுவார்கள். அவர்கள் **விசாரணைகளை** ஏற்பாடு செய்வார்கள். அவர்கள் **கலந்தாய்வுகள்** அல்லது **சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு** ஏற்பாடு செய்வார்கள்.*

6.18. *பதிவாளர் உதவிப் பணியாளர்களால் **விசாரணைகள்** மற்றும் **கலந்தாய்வுகள்** குறித்த தகவல்களை வழங்க முடியும்.*

6.19. *பதிவகப் பணியாளர்கள் **பதிவகப்** பணிகளில் உதவுவார்கள். பதிவகப் பணியாளர்களால், நீதிமன்றம் செயல்படும் விதம், **விசாரணைகள்** மற்றும் **மொழிபெயர்த்துரைப்பாளர்கள்** குறித்து உங்களுக்குப் பொதுவாகத் தெரிவிக்க முடியும். நீதிமன்றத்தின் இணையதளத்தில் படிவங்களைக் கண்டறிய அவர்களால் உங்களுக்கு உதவ முடியும். ஒரு விடயத்திற்கு நீதிமன்றக் கட்டணம் உள்ளதா என்பதையும், அந்தக் கட்டணம் எவ்வளவு இருக்கலாம் என்பதையும் அவர்களால் உங்களுக்குச் சொல்ல முடியும்.*

6.20. *உங்கள் வழக்கு தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், பதிவகப் பணியாளர்களிடம் கேட்க வேண்டும். உங்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டால் மட்டுமே, நீங்கள் சட்ட-அறை ஊழியர்களுடனோ, பதிவாளர் துணை ஊழியர்களுடனோ தொடர்பு கொள்ள வேண்டும்.*

# *7. நீதிமன்றத்தால் செய்ய முடியாதவை*

7.1. *நீதிமன்றத்தால் என்ன செய்ய முடியாது என்பதை இந்தப் பிரிவு உங்களுக்குத் தெரிவிக்கிறது. இதன் பொருள் என்னவென்றால், நீதிபதிகள், **பதிவாளர்கள்** மற்றும் நீதிமன்ற ஊழியர்களால் இந்த விடயங்களைச் செய்ய முடியாது என்பதாகும்.*

7.2. *நீதிபதிகள், **பதிவாளர்கள்** மற்றும் நீதிமன்ற ஊழியர்களால் உங்களுக்குச் **சட்ட ஆலோசனை** வழங்க முடியாது.*

7.3. *நீங்கள் நீதிமன்றத்தில் **வழக்கு** ஒன்றைத் தொடர வேண்டுமா அல்லது **மேல்முறையீடு** ஒன்றைச் செய்ய வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க அவர்களால் உங்களுக்கு உதவ முடியாது.*

7.4. *உங்கள் **கோரிக்கை**, **மேல்முறையீடு** அல்லது **தற்காப்பு** வாதத்தைத் தொடர்வது நல்ல யோசனையா என்பதை அவர்களால் உங்களுக்குச் சொல்ல முடியாது.*

7.5. ***சட்ட ஆவணங்களை** எவ்வாறு வரைவது என்றோ அல்லது உங்கள் **ஆதாரங்களை** எவ்வாறு சமர்ப்பிப்பது என்றோ அவர்களால் உங்களுக்குச் சொல்ல முடியாது.*

7.6. *உங்கள் **கோரிக்கை**, **மேல்முறையீடு** அல்லது **தற்காப்பு** வாதத்தில் நீங்கள் சேர்க்கக்கூடிய பயனுள்ள விஷயங்கள் என்ன என்பதை அவர்களால் உங்களுக்குச் சொல்ல முடியாது.*

7.7. ***சத்தியக் கடதாசிகள்** அல்லது **சாட்சி வாக்குமூலங்கள்** போன்ற **ஆவணங்களில்** நீங்களோ அல்லது வேறு எந்த சாட்சியோ என்ன சொல்ல வேண்டும் என்பதை அவர்களால் உங்களுக்குச் சொல்ல முடியாது.*

7.8. *அவர்களால் உங்களுக்காக வழக்கை நடத்த முடியாது.*

7.9. *விசாரணைகளின்போது என்ன பேச வேண்டும் என்றோ, அல்லது உங்கள் தரப்பைஎவ்வாறு சிறந்த முறையில் முன்வைக்க வேண்டும் என்றோ அவர்களால் உங்களுக்குச் சொல்ல முடியாது.*

7.10. *உங்கள் வழக்கில் வேறு எந்தத் **தரப்பினரையும்** மீறி அவர்களால் உங்களுக்குச் சாதகத்தை அளிக்க முடியாது.*

7.11. *உங்கள் வழக்கில் நீதிபதி அல்லது **பதிவாளர்** என்ன முடிவெடுப்பார் என்பதை நீதிமன்ற ஊழியர்களால் உங்களுக்குச் சொல்ல முடியாது.*

7.12. *விசாரணையின் போது தவிர, நீதிமன்ற ஊழியர்கள் உங்களை நீதிபதியுடன் நேரடியாகப் பேச அனுமதிக்க மாட்டார்கள்.*

7.13. *மற்ற **தரப்பினருக்குத்** தெரியாமல் நீதிமன்ற ஊழியர்கள் ஒரு **தரப்பினருக்குக்** கடிதம் எழுத முடியாது.*

## *8.* வழக்கறிஞர்கள் செய்வது

8.1. *வழக்கமாக மற்றதரப்பினரைப் **பிரதிநிதித்துவப்படுத்த** வழக்கறிஞர்கள் இருப்பார்கள். வழக்கறிஞர்கள் தங்கள் கட்சிக்காரருக்கு உதவ அங்கே இருப்பார்கள். உங்கள் தரப்பை முன்வைக்க உங்களுக்கு உதவ அவர்கள் அங்கு இருப்பதில்லை.*

8.2. *வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துடனும், தங்கள் கட்சிக்காரர்களுடனும், வழக்கில் உள்ள மற்றவர்களுடனும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்த விதிகளைக் கொண்டுள்ளனர். வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு உதவ வேண்டும் என்பது ஒரு விதி. நீதிமன்றத்திற்கு உதவுவதன் ஒரு பகுதியாக, உங்கள் வழக்கில் நீதிமன்றம் செயல்படும் விதத்தின் ஒரு பகுதியை ஒரு வழக்கறிஞர் உங்களுக்கு விளக்க முயற்சி செய்யலாம்.*

8.3. *வழக்கின் இறுதி விசாரணைக்குத் தயாராவதில் இரு தரப்பினரும் ஒத்துழைப்பார்கள் என்றும் நீதிமன்றம் எதிர்பார்க்கிறது. வழக்கில் ஏதேனும் நடக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், மற்ற **தரப்பினரின்** வழக்கறிஞரிடம் பணிவுடன் கோரிக்கை வைக்க வேண்டும். உங்களால் அதற்கு ஒப்புக்கொள்ள இயலுமாக இருக்கலாம். . இது நேரத்தையும் செலவையும் மிச்சப்படுத்துகிறது.*

8.4. *மற்ற **தரப்பு** வழக்கறிஞர் உங்களுக்கு **சட்ட ஆலோசனை** வழங்க முடியாது.*

8.5. *நீங்கள் வழக்கறிஞரிடம் கூறும் எதையும் அவர் தனது கட்சிக்காரருக்குத் தெரிவிக்க வேண்டும். மற்ற தரப்பினரின் வழக்கறிஞரிடம் ஒரு விடயத்தைச் சொல்வதற்கு முன், அது அவர்களுக்குத் தெரிய வேண்டுமா என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.*

## *9.* அடுத்த கட்டங்கள்

9.1. *இப்போது, வழக்கறிஞர் இல்லாமல் உங்கள் வழக்கைத் தொடர்வதா வேண்டாமா என்பதை நீங்கள் முடிவு செய்யலாம். உங்களுக்கு ஆலோசனை வழங்கவோ அல்லது உங்களுக்காக வாதாடவோ ஒரு வழக்கறிஞரைக் கண்டுபிடிக்க முயற்சிப்பது நல்லது என்று நீங்கள் முடிவு செய்யலாம்.*

9.2. *உங்கள் **கோரிக்கையை** அல்லது **மேல்முறையீட்டை** உண்மைகள் மற்றும் **சட்டத்தின்** அடிப்படையில் தாரம் உள்ளதாகக் காண்பிக்கவோ, ஆ நீங்கள் கோரும் **உத்தரவுகளை** உங்களால் விளக்கவோ முடியாத காரணத்தால், நீங்கள் ஒரு **கோரிக்கையை** அல்லது **மேல்முறையீட்டைத்** தொடங்கத் தயாராக இல்லாமல் இருக்கலாம். உங்கள் **கோரிக்கை** அல்லது **மேல்முறையீட்டைத்** தொடங்குவதற்கு முன், நீங்கள் மேலும் சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கும்.*

9.3. *வழக்கை மேற்கொண்டு நடத்துவதோ அல்லது அதற்காக வாதாடுவதோ வீண் சிரமம் என்று நீங்கள் முடிவு செய்யலாம்.*

9.4. *வழக்கறிஞர் இல்லாமல் வழக்கை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் முடிவு செய்திருந்தும், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து உங்களுக்குத் தெளிவில்லாமல் இருந்தால், தயவுசெய்து பதிவகத்துடன் தொடர்புகொள்ளவும். அடுத்து நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நீதிமன்றம் உங்களுக்கு மேலும் தெரிவிக்கக்கூடும்.*

.

*டிஎஸ் மோர்டிமர்*

*தலைமை நீதிபதி*

*5 மார்ச் 2026*

## இணைப்பு *A* சொற்பொருள் விளக்கம்

*நீங்கள் இதற்கு முன் கேட்டிராத சில சொற்கள் நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படலாம். ஆரம்பத்தில் உங்களுக்குப் புரியாமல் போகக்கூடிய சில சொற்களும் அவற்றின் பொருள்களும் அடங்கிய பட்டியல் இது. பயிற்சிக் குறிப்பில், சொற்கள்* ***இதுபோன்று*** *தடித்த எழுத்துக்களில் அடிக்கோடிடப்பட்டிருந்தன:*

| | |
|---|---|
| ***செயல்முறையைத் தவறாகப் பயன்படுத்துதல்*** | *வெற்றிக்கு வாய்ப்பே இல்லாத ஒரு வழக்கைத் தொடங்குவது அல்லது மற்றொரு தரப்பினருக்குத் தொல்லை தருவது அல்லது சினப்படுத்துவது .. சட்ட நடைமுறையைத் தவறாகப் பயன்படுத்தும் ஒரு வழக்கு தொடர்ந்து நடைபெற அனுமதிக்கப்படாது.* |
| ***ஒத்திவைப்பு*** | *ஒரு விசாரணை பிற்காலத் தேதி ஒன்றிற்கு ஒத்திவைக்கப்படுதல். . ஒத்திவைப்புக்குக் கோரிக்கை விடுக்கலாம், ஆனால் அது தானாகவே வழங்கப்படமாட்டாது.* |
| *சத்தியக் கடதாசி அல்லது சாட்சி வாக்குமூலம்* | *(நீங்கள் மத நம்பிக்கை உடையவராக இருந்தால்) சத்தியம் செய்வதன் மூலமோ, (நீங்கள் மத நம்பிக்கை அற்றவராக இருந்தால்) உறுதிமொழி அளிப்பதன் மூலமோ, உண்மை என்று நீங்கள் உறுதியளிக்கும் உண்மைகளின் எழுத்துப்பூர்வமான வாக்குமூலம். . உங்கள் கையொப்பத்திற்கு சாட்சியாக இருக்க அதிகாரம் பெற்ற ஒரு நபரின் முன்னிலையில் நீங்கள் உஙளுடைய எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தில் கையொப்பமிட வேண்டும்.* |
| ***விண்ணப்பதாரர்*** *அல்லது* ***வாதி*** | *வழக்கைத் தொடங்குவதற்காக நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கும்* ***தரப்பு****.* |
| ***மேல்முறையீடு*** | *முன்னர் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுமாறு நீதிமன்றத்தில் ஒரு* ***தரப்பினர்*** *செய்யும் விண்ணப்பம்.* |
| ***மேல்முறையீட்டாளர்*** | *நீதிமன்றத்தில்* ***மேல்முறையீட்டைத்*** *தொடங்கும்* ***தரப்பு****.* |
| ***பக்கச்சார்பு*** | *ஒரு தரப்பை விட மற்றொரு* ***தரப்புக்கு*** *முன்னுரிமை அளிப்பது.* |
| ***வழக்கு மேலாண்மை விசாரணை*** | *உங்கள் வழக்கில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் அல்லது பிற நடைமுறைச் சிக்கல்களைக் கையாள்வதற்காக, ஒரு நீதிபதி அல்லது* ***பதிவாளர்*** *முன்னிலையில் நடைபெறும் விசாரணை.* |
| ***சேம்பர்ஸ் (சட்ட அறை)*** | *'துணைமையர்' அல்லது 'நிர்வாக உதவியாளர்கள்' எனப்படும் பணியாளர்களால் நிர்வகிக்கப்படும் நீதிபதியின் அலுவலகம்.* |
| ***கோரிக்கை*** | *ஒரு சட்ட சச்சரவு தொடர்பாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினருக்கு எதிராக நீதிமன்றம்* ***உத்தரவுகளைப்*** *பிறப்பிக்கக் கோரி, விண்ணப்பதாரர் அல்லது வாதி ஒருவர் செய்யும்* |

| | |
|---|---|
| | விண்ணப்பம். |
| ***கலந்தாய்வு சந்திப்புகள்*** | தங்களது சச்சரவை அல்லது அதன் ஒரு பகுதியைத் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பதற்காக, நீதிமன்றத்திற்கு வெளியே **தரப்பினர்கள்** சந்திக்கும் ஒரு சந்திப்பு. ஒரு நீதிபதி, நீதிமன்றம் செயல்படும் விதத்தின் ஒரு பகுதியை இரு **தரப்பினரில்** ஒருவருக்கு மட்டும் விளக்குவதற்காக, அந்தத் **தரப்பினருடன்** மட்டும் ஒரு சந்திப்பை நடத்துமாறு **பதிவாளரைக்** கேட்டுக்கொள்ளலாம். இது விளக்கக் கூட்டம் என அழைக்கப்படுகிறது. |
| ***செலவுகள்*** | ஒரு வழக்கில் ஒரு **தரப்பினர்** சட்டச் செலவுகளுக்காகச் செலவிடும் பணம். இந்தச் செலவுகள் பெரும்பாலும், ஒரு **தரப்பினர்** வழக்கறிஞர்களுக்காகச் (சட்டத்தரணிகள் மற்றும் வழக்குரைஞர்களுக்கு) செலுத்திய பணம் மற்றும் நீதிமன்றக் கட்டணங்கள் போன்ற பிற சட்டச் செலவுகளாகும். |
| ***தற்காப்பு*** | **பதிலளிப்பவர்** அல்லது **பிரதிவாதி** அவரது **கோரிக்கையிலோ**, **மேல்முறையீட்டாளர்** அவரது **மேல்முறையீட்டிலோ** கோரியுள்ள **உத்தரவுகளை** நீதிமன்றம் ஏன் பிறப்பிக்கக் கூடாது என்பதற்கான **பதிலளிப்பவர்** அல்லது **எதிர்வாதியின்** காரணங்கள். |
| ***ஆவணம்*** | காகிதத்தில் எழுதப்பட்ட உரை அல்லது கணினியில் உள்ள உரை. சில ஆவணங்கள் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் இருக்க வேண்டியது அவசியம். . பதிவகப் பணியாளர்கள் சரியான நீதிமன்றப் படிவத்தைக் கண்டறிய உங்களுக்கு உதவுவார்கள். |
| ***ஆதாரம்*** | உங்கள் நீதிமன்ற **ஆவணங்களில்** நீங்கள் கூறியது உண்மை என்பதை நிரூபிக்கும் ஒன்று. சாட்சிகளின் வாக்குமூலங்கள் அல்லது **ஆவணங்களின்** உள்ளடக்கங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். |
| ***தாக்கல் செய்தல் அல்லது ஆவணங்களைத் தாக்கல் செய்தல்*** | நீதிமன்றத்தில் **ஆவணங்களைச்** சமர்ப்பித்தல், பின்னர் அவற்றை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள். . |
| ***இறுதி விசாரணை*** | கோரப்பட்ட **உத்தரவுகளைப்** பிறப்பிப்பதா வேண்டாமா என **நீதிபதி** அல்லது **பதிவாளர்** தீர்மானிக்கும், மற்றும் அவர்களுக்கு முன்பாக நடைபெறும் ஒரு விசாரணை. இறுதி விசாரணையின்போது அனைத்துத் **தரப்பினரும்** தங்கள் வாதங்களை முன்வைத்து, அந்த வாதங்களுக்கு ஆதாரமான உள்ள **சான்றுகளையும்** சமர்ப்பிப்பார்கள். |
| ***உருவாக்கச் செயற்கை நுண்ணறிவு செயலி*** *(AI செயலி என்றும் அழைக்கப்படுகிறது)* | மிகக் குறைந்த அல்லது மனித ஈடுபாடு இல்லாமலேயே, ஏற்கனவே உள்ள பெருமளவிலான தகவல்களைப் பயன்படுத்தி புதிய ஆவணங்கள், உரைகள், படங்கள் அல்லது பிற உள்ளடக்கங்களை உருவாக்கும் ஒரு வகை |

| | |
|---|---|
| | கணினி அடிப்படையிலான தொழில்நுட்பம். |
| ***விசாரணை*** | ஒரு நீதிபதி அல்லது **பதிவாளரின்** முன்னிலையில் நடைபெறும் ஒரு முறைசார்ந்த நிகழ்வு, இதில் நீதிபதி அல்லது **பதிவாளரின்** பரிசீலனைக்காகத் **தரப்பினர்** தகவல்களைச் சமர்ப்பிப்பர். . வழக்கமாக **விசாரணை** நீதிமன்ற அறையில் நடைபெறும், ஆனால் சில விசாரணைகள் இணையவழியில் நடைபெறலாம். |
| ***இடை விசாரணை விண்ணப்பம்*** | வழக்கின் போது மற்றும் **இறுதி விசாரணை** நடைபெறுவதற்கு முன்பு எந்தவொரு **தரப்பினராலும்** செய்யப்படும் ஒரு விண்ணப்பம். இந்த விண்ணப்பங்கள், வழக்கை விசாரிப்பதற்கான சரியான வழிமுறை குறித்து நீதிமன்றம் **உத்தரவு** பிறப்பிக்க வேண்டும் என்றோ அல்லது வழக்கை முன்கூட்டியே முடித்து வைக்கும் **உத்தரவுகளைப்** பிறப்பிக்க வேண்டும் என்றோ கோரலாம். |
| ***மொழிபெயர்த்துரைப்பாளர்*** | உங்கள் மொழியையும் ஆங்கிலத்தையும் பேசக்கூடிய ஒருவர். இவர் உங்கள் சொற்களை ஆங்கிலத்திலும், நீதிமன்றத்திலோ அல்லது பிற இடங்களிலோ பயன்படுத்தப்படும் ஆங்கிலத்தை உங்கள் மொழியிலும் மொழிபெயர்த்துக் கூறுவார். |
| ***அதிகார வரம்பு*** | நீதிமன்றம் பரிசீலிக்கக்கூடிய வழக்குகளின் வகைகள் மற்றும் சட்டப் பிரிவுகள். நீதிமன்றங்கள் தங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட விடயங்கள் குறித்து மட்டுமே உத்தரவுகளைப் பிறப்பிக்க முடியும். |
| ***சட்டம்*** | நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் போன்ற சட்டமியற்றல், மற்றும் நீதிமன்ற உத்தரவுகள், தீர்ப்புகள் உட்பட, முந்தைய வழக்குகளில் நீதிபதிகளால் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள். |
| ***சட்ட ஆலோசனை*** | **சட்டம்** மற்றும் அது உங்கள் வழக்கின் உண்மைகளுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பது குறித்த விளக்கங்கள். |
| ***சட்ட வழக்கு*** *(அல்லது வழக்கு)* | **விண்ணப்பதாரர், வாதி** அல்லது **மேல்முறையீட்டாளர்** ஒருவரால் தாக்கல் செய்யப்படும் **கோரிக்கை** அல்லது **மேல்முறையீட்டின்** மூலம் தொடங்கப்பட்டு, நீதிமன்றத்தால்விசாரிக்கப்படும் ஒரு சட்டரீதியான சச்சரவு |
| ***சட்ட ஆவணங்கள்*** | ஒரு **தரப்பினர்** நீதிமன்றத்தில் **தாக்கல்** செய்யுமாறு நீதிமன்றம் கோரும் **ஆவணங்கள்.** இந்த ஆவணங்கள் பொதுவாக நீதிமன்றத்தின் இணையதளத்தில் கிடைக்கும் நீதிமன்றப் படிவத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட வேண்டும். . |
| ***சட்ட சிக்கல்கள்*** | சட்டம் எவ்வாறு விளக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது என்பதை நீதிமன்றம் |

| | |
|---|---|
| | தீர்மானிக்க வேண்டும். |
| ***சட்ட ஆய்வுத் தரவுத்தளம்*** | *ஆஸ்திரேலேசியச் சட்டத் தகவல் நிறுவனம் (Australasian Legal Information Institute) அல்லது ஜேட்*<br><br>*(Jade) போன்ற, முந்தைய வழக்குகள் மற்றும் சட்டங்களின் நகல்களை உள்ளடக்கிய ஒரு இணையதளம். சில சட்ட ஆய்வுத் தரவுத்தளங்களின் பட்டியல் இணைப்பு D-இல் உள்ளது. .* |
| ***நேரில் வழக்காடுபவர்*** | ***தங்களுக்காக வாதாட*** *வழக்கறிஞர் இல்லாத ஒரு* ***தரப்பு****.* |
| ***மத்தியஸ்தம்*** | *மத்தியஸ்தர் எனப்படும் ஒரு சுயாதீனமான ஒருவர், சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்கள் சச்சரவை முடிவுக்குக் கொண்டுவர ஒரு உடன்பாட்டிற்கு வர உதவும் செயல்முறை.* |
| ***உத்தரவு*** | *நீதிமன்றத்தின் ஓர் அறிவுறுத்தல் அல்லது தீர்ப்பு. நீதிமன்ற உத்தரவைப் பின்பற்றாவிட்டால் கடுமையான பின்விளைவுகள் ஏற்படும்.* |
| ***தரப்பு*** *அல்லது* ***தரப்புகள்*** | *ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட நபர், இதில்* ***விண்ணப்பதாரர்கள் (வாதிகள்)****,* ***பதிலளிப்பவர்கள் (பிரதிவாதிகள்)*** *மற்றும்* ***மேல்முறையீட்டாளர்கள்*** *அடங்குவர். தரப்பினர் என்பவர்கள் தனிநபர்கள், அமைப்புகள் அல்லது பெருநிறுவனங்களாக இருக்கலாம்.* |
| ***பயிற்சிக் குறிப்பு*** | *நீதிமன்ற நடைமுறைகளை விவரித்து, நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட ஓர்* ***ஆவணம்****.* |
| ***போலிச் சட்டம்*** | ***சட்டம்*** *போல் தோன்றும் ஆனால் உண்மையான* ***சட்டத்தை*** *அடிப்படையாகக் கொண்டிராத கூற்றுகள், வாதங்கள், நம்பிக்கைகள் அல்லது நடைமுறைகள்.* |
| ***நியாயமான சரிசெய்தல்கள்*** | *உடல் குறைபாடு போன்ற காரணங்களால் நீதிமன்றத்தை அணுகுவதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீதிமன்ற செயல்முறைகள் அல்லது சூழல்களில் நியாயமான முறையில் செய்யக்கூடிய மாற்றங்கள்.* |
| ***பதிவாளர்*** | *உங்கள் வழக்கின் சில பகுதிகளைத் தீர்மானிப்பது மற்றும்* ***உத்தரவுகளைப்*** *பிறப்பிப்பது உட்பட, வழக்கின் குறிப்பிட்ட பகுதிகளைக் கையாள்வதன் மூலம் நீதிபதிகளுக்கு உதவக்கூடிய ஒருவர்.* |
| ***பதிவகம்*** | *ஒவ்வொரு மாநிலம் மற்றும் ஆள்புலத்தில் நீதிமன்றத்தில்* ***ஆவணங்களைச்*** *சமர்ப்பிக்கக்கூடிய ஓர் இடம். பதிவகம், பதிவகப் பணியாளர்களால் இயக்கப்படுகிறது. பதிவகங்களின் இருப்பிடங்கள் மற்றும் தொடர்பு விவரங்களின் பட்டியல் நீதிமன்றத்தின் இணையதளத்தில் கிடைக்கிறது.* |
| ***பிரதிநிதித்துவம்*** | *ஒரு வழக்கறிஞர் உங்களுக்காக* ***ஆவணங்களைத்*** *தயாரித்தல், நீதிமன்ற* ***விசாரணைகளில்*** |

| | |
|---|---|
| | கலந்துகொள்ளுதல் மற்றும் உங்கள் சார்பாக மற்ற **தரப்பினருடன்** பேசுதல் போன்றவற்றைச் செய்யும்போது. |
| **பதிலளிப்பவர்** *(சில சமயங்களில் பிரதிவாதி என்றும் அழைக்கப்படுவார்)* | ஒரு வழக்கில் தற்காத்துக் கொள்ளும் **தரப்பு**. |
| ***சமூக ஊடகங்கள்*** | மக்கள் சுயவிவரங்களை உருவாக்கி, தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்காக இணைய சமூகங்களுடன் உரையாடும் மின்னணுத் தளங்கள். *Facebook, TikTok* மற்றும் *Instagram* ஆகியவை இதற்கு உதாரணங்களாகும். |
| ***அழைப்பாணை*** | நீதிமன்றத்தில் **சாட்சியம்** அளிக்கவோ, **ஆவணங்களைச்** சமர்ப்பிக்கவோ நபர் ஒருவருக்கு உத்தரவிட்டு நீதிமன்றத்தால் வழங்கப்படும் ஓர் **ஆவணம்**. |

## இணைப்பு B – நீதிமன்றத்தின் நோக்கங்கள்

*நீதிமன்றத்தின் நோக்கங்கள் (சட்டத்தின் பிரிவு 37M):*

*சட்டத்தைப் பயன்படுத்தி சச்சரவுகளைத் தீர்ப்பதும், அதனை முடிந்தவரை விரைவாகவும், குறைந்த செலவிலும், சிறப்பாகவும் செய்வதுமே நீதிமன்றத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும்.*

*இந்த நோக்கத்தை மனதில் கொண்டு நீதிமன்றம் தனது வழக்குகளைக் கையாளுகிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, நீதிமன்றம் நடைமுறை மற்றும் செயல்முறை விதிகளையும் பின்பற்றுகிறது. நடைமுறை மற்றும் செயல்முறை விதிகள் சட்டத்திலும் விதிகளிலும் வகுக்கப்பட்டுள்ளன.*

***நீதிமன்றம் அதன் நோக்கத்தை நிறைவேற்ற தரப்பினர் அவசியம் உதவ வேண்டும் (சட்டத்தின் பிரிவு 37N):***

*நீதிமன்றம் அதன் நோக்கத்தை நிறைவேற்ற தரப்புகள் உதவ வேண்டும். தங்கள் சச்சரவைத் தீர்க்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதன் மூலம் அவர்கள் இதைச் செய்வார்கள். தங்களது சச்சரவுக்கு ஒரு சாத்தியமான தீர்வு காண்பது குறித்து கலந்தாய அவர்கள் சந்திப்பதும் இதில் அடங்கும். சமரசம் என்பது, சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்கள் சச்சரவை நீதிமன்றத்திற்கு வெளியே எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பது குறித்து உடன்படுவதாகும். ஒரு தரப்பினரின் வழக்கறிஞர், அவர்களுடைய சச்சரவைத் தீர்க்க அவர்களுக்குக் கட்டாயமாக உதவ வேண்டும்.*

*நீதிமன்றத்தில் தகராறைத் தீர்ப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும் மற்றும் அதற்கான செலவுகள் என்னவாக இருக்கலாம் என்பது குறித்து தனது கட்சிக்காரருக்கு ஒரு மதிப்பீட்டை வழங்குமாறு நீதிமன்றம் ஒரு வழக்கறிஞரைக் கேட்கலாம். செலவுகளில் வழக்கறிஞர்களின் கட்டணங்களும், நீதிமன்றம் மற்றும் பிறருக்குச் செலுத்த வேண்டிய இதர கட்டணங்களும் அடங்கும். நீதிமன்ற வழக்கைத் தொடர்வது தங்களுக்குப் பயனுள்ளதா அல்லது வழக்கைச் சமரசம் செய்துகொள்வது நல்லதாஎன்பதை முடிவுசெய்ய இது அந்தத் தரப்புக்கு உதவும்.*

*ஒரு தரப்பினர், சமரசப் பேச்சுவார்த்தையின் போது உட்பட, சச்சரவைத் தீர்க்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்யத் தவறினால், நீதிமன்றம் அவர்களுக்கு எதிராக செலவுத் தொகையை விதிக்க உத்தரவிடலாம்.*

*ஒரு தரப்பினரின் வழக்கறிஞர், அவர்களுடைய சச்சரவை முடிந்தவரை விரைவாகவும், குறைந்த செலவிலும், சிறப்பாகவும் தீர்த்து வைக்க உதவவில்லை என்றால், நீதிமன்றம் அந்த வழக்கறிஞருக்கு எதிராக செலவுத் தொகை உத்தரவைப் பிறப்பிக்கலாம். அப்படியென்றால், வழக்கறிஞர் இதற்கு ஆகும் செலவுகளைத் தங்களது வாடிக்கையாளரிடமிருந்து திரும்ப வசூலிக்க இயலாது.*

## இணைப்பு C – பயிற்சிக் குறிப்புகள்

நீதிமன்றத்தின் மற்ற அனைத்து நடைமுறைக் குறிப்புகளையும் இங்கே காணலாம்.

***Central Practice Note***

- Central Practice Note (CPN-1)

***National Practice Area Practice Notes***

- Administrative and Constitutional Law and Human Rights Practice Note (ACLHR-1)
- Admiralty and Maritime Practice Note (A&M-1)
- Commercial and Corporations Practice Note (C&C-1)
- Commercial Arbitration Practice Note (CA-1)
- Defamation Practice Note (DEF-1)
- Employment and Industrial Relations Practice Note (E&IR-1)
- Federal Crime and Related Proceedings Practice Note (CRIME-1)
- General and Personal Insolvency Sub-area Practice Note (GPI-1)
- Intellectual Property Practice Note (IP-1)
- Intellectual Property Practice Note – Standard Directions for Australian Patent Proceedings (IP-2)
- Migration Practice Note (MIG-1)
- Migration Practice Note - Removal from Australia of Immigration Detainees who have Proceedings before the Court (MIG-2)
- Native Title Practice Note (NT-1)
- Taxation Practice Note (TAX-1).

***General Practice Notes***

- Access to Documents and Transcripts Practice Note (GPN-ACCS)
- Class Actions Practice Note (GPN-CA)
- Consent Orders Involving a Federal Tribunal Practice Note (GPN-TRIB)
- Costs Practice Note (GPN-COSTS)
- Cross-Border Insolvency Practice Note: Cooperation with Foreign Courts or Foreign Representatives (GPN-XBDR)
- Duty (Urgent) Applications Interim Practice Note during 3 Region Trial

(GPN-DUTY)

- eBooks Practice Note (GPN-eBOOKS)
- Enforcement, Endorsement and Contempt Practice Note (GPN-ENF)
- Expert Evidence Practice Note (GPN-EXPT)
- Foreign Judgments Practice Note (GPN-FRGN)
- Freezing Orders Practice Note (GPN-FRZG)
- Interest on judgments Practice Note (GPN-INT)
- Lists of Authorities and Citations Practice Note (GPN-AUTH)
- Next Generation Initiative Practice Note (GPN-NGI)
- Overseas Service and Evidence Practice Note (GPN-OSE)
- Referee and Assessor Practice Note (GPN-REF)
- Schemes of Arrangement Practice Note (GPN-SOA)
- Search Orders Practice Note (GPN-SRCH)
- Subpoenas and Notices to Produce Practice Note (GPN-SUBP)
- Survey Evidence Practice Note (GPN-SURV)
- Technology and the Court Practice Note (GPN-TECH)
- Usual Undertaking as to Damages Practice Note (GPN-UNDR)
- Working with Interpreters Practice Note (GPN-INTERP)

***Appeals Practice Notes***

- Practice Note APP 1: Case management of Full Court and Appellate Matters
- Practice Note APP 2: Content of Appeal Books and Preparation for Hearing

## இணைப்பு D – சட்ட ஆய்வுத் தரவுத்தளங்கள்

*பின்வரும் சட்ட ஆய்வுத் தரவுத்தளங்களை இலவசமாக அணுகலாம்:*

| பெயர் | கிடைக்கும் தகவல் |
|---|---|
| ஆஸ்திரேலிய சட்ட தகவல் நிறுவனம் *(AustLII)* | பெரும்பாலான ஆஸ்திரேலிய நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் வழக்குகளைப் பற்றிய தகவல்கள் கிடைக்கும். . *AustLII* மூலம் எல்லா வழக்குகளும் கிடைக்காது. |
| *Jade* | பெரும்பாலான ஆஸ்திரேலிய நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் வழக்குகளைப் பற்றிய தகவல்கள் கிடைக்கும். . *Jade* மூலம் எல்லா வழக்குகளும் கிடைக்காது. |
| கூட்டாட்சிச் சட்டப் பதிவேடு | அனைத்து கூட்டாட்சி **சட்டங்களும்**. |
| ஆஸ்திரேலியாவின் கூட்டாட்சி நீதிமன்றத் தீர்ப்புகள் தேடல் | *1977* ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியாவின் கூட்டாட்சி நீதிமன்றம் மற்றும் அதன் முழு அமர்வு வழங்கிய அனைத்துத் தீர்ப்புகளும். தீர்ப்புகள் தேடல் தளம் குறித்த கூடுதல் தகவல்களை நீதிமன்றத்தின் இணையதளத்தில் காணலாம். |